செ.வெ. எண்: 419 நாள்: 6.7.2011

**தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தில்**
**மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின்**
**வளர்ச்சி பணிகள் குறித்த ஆய்வு.**

---000---

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. சி. சண்முகவேலு அவர்கள் 6.7.2011 அன்று தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் வளர்ச்சி பணிகள் குறித்த ஆய்வை அதன் தலைமை அலுவலகத்தில் மேற்கொண்டார். கிண்டி தொழிற்பேட்டையில் அரசுத் துறைகளுக்கும், அரசுடமை நிறுவனங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட நில விவரங்கள் குறித்தும், காலியாக உள்ள மனைகள் குறித்தும் கேட்டறிந்தார். கிண்டி தொழிற்பேட்டையின் உட்கட்டமைப்பு பராமரிப்பு குறித்தும் அங்கு இயங்கி வரும் தொழில் நிறுவனங்களின் உற்பத்திகள் குறித்தும், வேலை வாய்ப்புகள் குறித்தும் வினவினார். மேற்கண்ட விவரங்களை அனைத்து தொழிற்பேட்டைகளிலும் சேகரித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பணித்தார்,

கிண்டி தொழிற்பேட்டையில் அமைக்கப்பட்டு வரும் சிட்கோ தலைமை அலுவலக கட்டிடத்தின் கட்டுமான பணிகள் குறித்த ஆய்வை மேற்கொண்டு அதன் பணிகளை விரைவுபடுத்தவும், குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்குமாறும் பணித்தார். கட்டுமான பணிகளையும் நேரில் சென்று ஆய்வு செய்தார்.

அனைத்து தொழிற்பேட்டைகளிலும் நடைபெற்று வரும் உட்கட்டமைப்பு பணிகள் குறித்த விரிவான ஆய்வை மேற்கொண்டு அதனை விரைவாக உரிய காலத்திற்குள் முடிக்குமாறு அறிவுரை வழங்கினார்.

இந்நிறுவனம் தவிர, கிண்டி தொழிற்பேட்டையில் அமைந்துள்ள தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (TANSI) , தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் (Enterpreneurs Development Institute)ஆகிய அரசுடமை நிறுவனங்களையும் ஆய்வு செய்தார். ஆய்வின்போது தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனரும் , தொழில் வணிகத்துறை ஆணையர் மற்றும் இயக்குனரும், தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனரும் மற்றும் உயர் அதிகாரிகளும் உடன் இருந்தனர்.

**********

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**